


13. 05. 2026

## தலைப்புச் செய்திகள்

- தமிழக சட்டப்பேரவையில் இன்று நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் 144 உறுப்பினர்களின் ஆதரவுடன் த.வெ.க அரசு வெற்றிபெற்றுள்ளது.
- முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட மக்கள் நல திட்டங்கள் தொடரும் என்று முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.
- புதுச்சேரி முதலமைச்சராக என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் திரு. ரங்கசாமி இன்று பதவி ஏற்றார்.
- திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோவில் ஆருகே இன்று அதிகாலை நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.
- ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுரு – கொல்கத்தா நைட்ரைடர்ஸை இன்று எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

**************

வாக்கெடுப்பு

தமிழக வெற்றி கழக அரசு தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் 144 உறுப்பினர்களின் ஆதரவுடன் வெற்றிபெற்றுள்ளது.

நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 22 பேர் வாக்களித்த நிலையில்

5 பேர் நடுநிலைமை வகித்தனர்.

முன்னதாக தமிழக முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் தமது அரசின் மீதான நம்பிக்கை கோரும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இந்த தீர்மானத்தின் மீது பேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சி, அமமுகவிலிருந்து நீக்கப்பட்ட ஒரு உறுப்பினர் திரு.எஸ்.பி.வேலுமணி

தலைமையிலான அஇஅதிமுக உறுப்பினர்கள் த.வெ.கவிற்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றினர்.

திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தலைமையிலான அஇஅதிமுகவை சேர்ந்த 22 உறுப்பினர்கள் த.வெ.க-விற்கு எதிர்ப்பு தெரிவித்து வாக்களித்தனர்.

சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின் பேசுகையில் முந்தைய திமுக அரசு நிறைவேற்றிய மக்கள் நல திட்டங்களை தொடர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப மதசார்பற்ற முன்னேற்ற கூட்டணியின் பணிகள் தொடரும் என்றும் கூறினார்.

சில விமர்சனங்களை முன்வைத்து அவையிலிருந்து வெளிநடப்பு செய்வதாக அறிவித்தார்.

இதனையடுத்து திமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.

இதனை தொடர்ந்து நம்பிக்கை தீர்மானத்தை அவைத்தலைவர் திரு.JCD பிரபாகர் வாக்கெடுப்பிற்கு அனுமதித்தார்.

குரல் வாக்கெடுப்பு மூலம் 144 உறுப்பினர்களின் ஆதரவுடன் திரு.விஜய் தலைமையிலான த.வெ.க அரசு வெற்றிபெற்றதாக பேரவை தலைவர் அறிவித்தார்.

இதனை தொடர்ந்து பேசிய முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் நம்பிக்கை வாக்கெடுப்பில் தமது அரசுக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட மக்கள் நல திட்டங்கள் தொடரும் என்றும், கூறினார்.

சிறுபான்மையினரின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்த அவர், மக்களின் நலனிற்காக தமது அரசு செயலாற்றும் என்றார்.

வாய்ஸ்

உறுப்பினர்கள் தெரிவித்த சில கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இதனை தொடர்ந்து சட்டப்பேரவை மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுவதாக பேரவை தலைவர் திரு. J C D பிரபாகர் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் 108 இடங்களுடன் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த த.வெ.க தனது பெரும்பான்மையை இன்று நிரூபிக்க தமிழக ஆளுநர் திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் உத்தரவு பிறப்பித்திருந்த

நிலையில் திரு.விஜய் தலைமையிலான அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளது.

**************

புதுச்சேரி

புதுச்சேரி முதலமைச்சராக தேசிய ஜனநாயக கூட்டணி தலைமையிலான என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் திரு.ரங்கசாமி இன்று பதவி ஏற்றார்.

அவருக்கு, துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ் நாதன் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பிஜேபி தேசிய தலைவர் திரு.நிதின் நபின் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**************

தங்கம் வெள்ளி வரி

தங்கம் உள்ளிட்ட விலை மதிப்புமிக்க உலோகங்களின் இறக்குமதி வரியை மத்திய அரசு அதிகரித்துள்ளது.

இதன்படி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தங்கம் வெள்ளி போன்றவற்றிற்கு 5 சதவிகித வரியும்,

பிளாட்டினத்திற்கு 5.4 சதவிகித வரியும் விதித்து மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**************

வாகனம்

மேற்காசிய நெருக்கடி தொடரும் நிலையில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை குறைத்துக்கொண்டுள்ளார்.

அண்மையில் குஜராத் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்ட போது இந்த செயல்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்காசியா பதற்றத்தால் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை சார்ந்திருப்பதை குறைத்துக்கொள்ள வேண்டும் உள்ளிட்ட 7 வேண்டுகோள்களை பிரதமர் அண்மையில் விடுத்த நிலையில் பிரதமரின் வாகனங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷாவும் பிரதமரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப தமது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை பெருமளவு குறைத்துக்கொண்டுள்ளார்.

**************

விபத்து

திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோவில் ஆருகே நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

சோதனை சாவடியில் தடுப்புகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த லாரி ஓட்டுநர் மற்றும் காவலர்கள் மீது கார் மோதியதில் இந்த விபத்து நேரிட்டது.

இந்த கார் மயிலாடுதுறையிலிருந்து கோவை நோக்கி சென்று கொண்டிருந்த போது இந்த சம்பவம் நேரிட்டது.

இதனிடையே இந்த சம்பவத்தில் உயிரிழந்த வெள்ளக்கோவில் காவல்நிலைய காவலரின் குடும்பத்திற்கு 30 லட்ச ரூபாய் நிவாரண நிதி வழங்க முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

அவரை இழந்துள்ள குடும்பத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

**************

நீதிபதி

மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, சமூக பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் சட்ட செயலாக்கம் போன்ற முறையான சீர்திருத்தங்களின் அவசியத்தை தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதிபதி வி. ராமசுப்பிரமணியன் வலியுறுத்தியுள்ளார்.

புலம்பெயரும் தொழிலாளர்களின் உரிமைகள் அரசு மற்றும் தனியார் துறையின் பொறுப்புணர்வு தொடர்பான உயர்நிலை கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், அமைப்பு சாரா பிரிவை சேர்ந்துள்ள புலம்பெயர் தொழிலாளர்களே பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டினார்.

இப்புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண பல்வேறு அமைப்பு நிலையிலான விவாதங்கள் மற்றும் ஆலோசனைகள் தேவை என்று அவர் குறிப்பிட்டார்.

இதில் விவாதிக்கப்படும் கருத்துக்களை மத்திய மற்றும் சம்மந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு பரிந்துரைப்பதன் மூலம் உரிய தீர்வுகளுக்கு வழிவகை செய்யும் என்று குறிப்பிட்டார்.

**************

my bharath

வளர்ச்சிப்பாதையில் கிராமங்கள் 2026 தேசிய வினாடி வினா நிகழ்ச்சியை மத்திய இளைஞர் நல விளையாட்டு அமைச்சகமும், உள்துறை அமைச்சகமும் இணைந்து my bharath தளத்தில் தொடங்கியுள்ளது.

எல்லை கிராம மேம்பாட்டு திட்டத்திற்கான செயல்பாடுகள் அடுத்த மாதம் தொடங்க உள்ள நிலையில் இளையோரின் பங்களிப்பை ஈர்க்கும் முதல் கட்ட நடவடிக்கையாக இந்த

வினாடி வினா நிகழ்ச்சி நடத்தப்படுவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வரும் 20-ஆம் தேதிவரை இணையதள வாயிலாக நடைபெறும் இந்தவினாடி வினா நிகழ்ச்சியில் நாட்டில் உள்ள இளையோர் பங்கேற்க அமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த வினாடி வினா நிகழ்ச்சியில் சிறப்பாக செயல்படும் இளையோரின் தகுதியும், உடல் ஆரோக்கியமும் மதிப்பிடப்பட்டு 500 பேர் தேர்வு செய்யப்பட்டு அடுத்த மாதம் நடைபெறும் மிக முக்கிய பிரமுகர்கள் V V V P ஒருவார நிகழ்ச்சியில் பங்கேற்க தகுதிபெறுவார்கள்.

எல்லை கிராம மறுசீரமைப்பு உள்ளூர் கலாச்சாரம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, எல்லை பகுதிகளை வலுப்படுத்துவதற்கான மத்திய அரசின் முயற்சிகளை இளையோர் தெரிந்துகொள்ளும் வகையில் இந்த இணையதள வினாடி வினா நிகழ்ச்சி ஒரு கலந்துரையாடல் தளமாக திகழும் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

**************

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகள் தனி அடையாள எண்கள் பெற வரும் 30-ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டுமென்று ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

**************

இருவரி

மயிலாடுதுறை மாவட்டத்தில் பிரதமரின் கவுரவ நிதி தொகை பெற்றுவரும் விவசாயிகள் தங்களின் நில உடமை விவரங்களை உடனடியாக பதிவு செய்ய வேண்டும் என ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுவரை பதிவு செய்யாதவர்கள் அருகில் உள்ள பொது சேவை மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்களை அணுகுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் பேரீஜம் ஏரி பகுதிக்கு சுற்றுலா பயணிகள் இன்றுமுதல் அனுமதிக்கப்படுவதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

**************

தென்காசி

தென்காசி மலர்ச் சந்தையில் பூக்களின் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்தள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

**************

வானிலை

தென்மேற்கு வங்க கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி வடக்கு திசையில் நகர்ந்து மத்திய மேற்கு வங்க கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள்,

கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

**************

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ராய்பூரில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – கொல்கத்தா நைட்ரைடர்ஸை எதிர்கொள்கிறது.

புள்ளிகள் பட்டியலில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு தற்போது இரண்டாவது இடத்திலும்,

குஜராத் டைட்டன்ஸ் முதல் இடத்திலும் உள்ளன.

சென்னை சூப்பர் கிங்ஸ் 5ஆவது இடத்தை வகிக்கிறது.

**************

ஸ்குவாஷ்

தேசிய இரட்டையர் ஸ்குவாஷ் போட்டிகள் சென்னையில் இன்று தொடங்கியது.

வரும் 16 ஆம் தேதிவரை நடைபெற உள்ள இப்போட்டியில் அபய் சிங், ஜோஸ்னா சின்னப்பா, ரத்திகாசீலான், ராகுல் பைத்தா, ஹரீந்தர் பால்சிங் சந்து, வேலவன் செந்தில்குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் வெற்றிபெறுவோர் அடுத்த மாதம் 18ஆம் தேதி மலேசியாவில் நடைபெற உள்ள ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் போட்டிக்கு தகுதிபெறுவர்.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது